**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 36/2021 |
| Name | : Chitra |
| P.W. | : 3 |
| Husband Name | : David |
| Village | : Kannadiputtur |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : Garments Labour |
| Religion | : |
| Age | : 36/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15 .02.2022

நான் கண்ணாடிப்புத்தூரில் குடியிருந்து விக்டஸ் கார்மெண்ட்ஸ்சில் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.03.2021 அன்று இரவு 10.30 மணி இருக்கும். நான் தூங்கிக்கொண்டு இருந்தேன். எனது வீடும் சர்ச்சும் ஒன்று தான். சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்த்த போது ஆஜர் 2 முதல் 4 எதிரிகள் அத்துமீறி சர்ச்சிற்குள் வந்து இளவரசனை அடித்தார்கள். பிளாஸ்டிக் சேர் மற்றும் சில்வர் குண்டாவால் அடித்தார்கள். அந்த போசி ஏற்கனவே அரசு சான்று பொருள் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சேர் ஏற்கனவே அரசு சான்று பொருள் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் அடித்ததில் இளவரசனுக்கு மண்டை உடைந்தது உடம்பில் காயம் ஏற்பட்டது. கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். இளவரசனை கொல்லாமல் விடமாட்டேன் என்று

மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.